# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

[*2024 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024,* மே மாதம் *03* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2024 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[2024 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஒ. 29/2022

### 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — *சுருக்கப் பெயர்*

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 185 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது: -

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீளிலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) மீளிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

> "(2) தண்டனைத் தீர்ப்பு வழங்குகின்ற நேரத்தில், நீதிவான், இயைபான எல்லா நிகழ்வுகளையும் கவனத்துட்கொண்ட பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுகின்றாரோ அந்தத் தவறுக்கான குற்றத்தீர்ப்புக்கு முன்னதாக கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட காலத்தை நீதிநெறிக் கவனத்திலெடுக்கலாம் என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பங்களில் கட்டுக்காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது, அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாக விருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட காலமானது அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகவிருப்ப தாகக் கருதப்படாதவிடத்து, நீதிவான் அதற்கான காரணங்களைப் பதிவுசெய்தல் வேண்டும்:

ஆயின் மேலும், குற்றத்தீர்ப்புக்கு முன்னதாக குற்றஞ்சாட்டப்பட்டவரினால் கட்டுக்காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது, குற்றஞ் சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றஞ் சாட்டப்படுகின்றாரோ அந்தத் தவறு தொடர்பில் சட்டத்தினால் பணிப்பாணை முறையான குறைந்த பட்ச தண்டனைத் தீர்ப்பொன்று விதிக்கப்படு கின்றவிடத்து, கவனத்துட்கொள்ளப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "கட்டுக் காவல்" என்பது விளக்கமறியல் கட்டுக்காவலில் செலவிடப்பட்ட காலம் எனப் பொருள்படும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீளிலக்க மிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) மீளிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) தண்டனைத் தீர்ப்பு வழங்குகின்ற நேரத் தில், நீதிபதி, இயைபான எல்லா நிகழ்வுகளையும் கவனத்துட்கொண்ட பின்னர், குற்றஞ்சாட்டப் பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் படுகின்றாரோ அந்தத் தவறுக்கான குற்றத் தீர்ப்புக்கு முன்னதாக கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட

காலத்தை நீதிநெறிக்கவனத்திலெடுக்கலாம் என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பங்களில் கட்டுக்காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகவிருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட காலமானது அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகவிருப்ப தாகக் கருதப்படாதவிடத்து, நீதிபதி அதற்கான காரணங்களைப் பதிவுசெய்தல் வேண்டும்:

ஆயின் மேலும், குற்றத்தீர்ப்புக்கு முன்னதாக குற்றஞ்சாட்டப்பட்டவரினால் கட்டுக்காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது, குற்றஞ் சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றஞ் சாட்டப்படுகின்றாரோ அந்தத் தவறு தொடர்பில் சட்டத்தினால் பணிப்பாணை முறையான குறைந்த பட்ச தண்டனைத் தீர்ப்பொன்று விதிக்கப்படுகின்ற விடத்து, கவனத்துட்கொள்ளப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ''கட்டுக்காவல்'' என்பது விளக்கமறியல் கட்டுக்காவலில் செலவிடப்பட்ட காலம் எனப் பொருள்படும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 238அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**4.** பின்வரும் புதிய பிரிவு முதன்மைச் சட்டவாக்கத்தின், 238 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக் கத்தின் 238அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"தண்டனைத் தீர்ப்பை வழங்குதல்*

**238அ.** (1) தண்டனைத் தீர்ப்பு வழங்குகின்ற நேரத்தில், நீதிபதி, இயைபான எல்லா நிகழ்வுகளை யும் கவனத்துட்கொண்ட பின்னர், குற்றஞ்சாட்டப் பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்

கப்படுகின்றாரோ அந்தத் தவறுக்கான குற்றத் தீர்ப்புக்குமுன்னதாக கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட காலத்தை நீதிநெறிக்கவனத்திலெடுக்கலாம் என்பதுடன், அத்தகைய சந்தர்ப்பங்களில் கட்டுக் காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகவிருப்ப தாகக் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், கட்டுக்காவலில் அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவரினால் செலவிடப்பட்ட காலமானது அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகவிருப்ப தாகக் கருதப்படாதவிடத்து, நீதிபதி அதற்கான காரணங்களைப் பதிவுசெய்தல் வேண்டும்:

ஆயின் மேலும், குற்றத்தீர்ப்புக்கு முன்னதாக குற்றஞ்சாட்டப்பட்டவரினால் கட்டுக்காவலில் அவ்வாறு செலவிடப்பட்ட காலமானது, குற்றஞ் சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்குக் குற்றஞ்சாட்டப் படுகின்றாரோ அந்தத் தவறு தொடர்பில் சட்டத்தி னால் பணிப்பாணை முறையான குறைந்தபட்ச தண்டனைத் தீர்ப்பொன்று விதிக்கப்படுகின்ற விடத்து, கவனத்துட்கொள்ளப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "கட்டுக் காவல்" என்பது விளக்கமறியல் கட்டுக்காவலில் செலவிடப்பட்ட காலம் எனப் பொருள்படும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 323 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 323 ஆம் பிரிவு, அதன் (5) ஆம் உட்பிரிவில், "அவ்வாறு கழித்த காலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கழித்த காலம்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 333 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 333 ஆம் பிரிவு, அதன் (5) ஆம் உட்பிரிவில், "கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது:-

"கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், மேன்முறையீட்டு நீதிமன்றம், தோதான விடயங்களில், மேன்முறையீட்டாளரொருவரின் மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை அவரினால் கட்டுக்காவலில் செலவிடப்பட்ட காலமும், குற்றத்தீர்ப்புக்கு முன்னதாக கட்டுக்காவலில் செலவிடப்பட்ட ஏதேனும் காலமும், முதனிலை நீதிமன்றத்தினால் அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட நேரத்தில் வழங்கப்பட்ட அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகக் கருத்திற் கொள்ளப்படாத அத்தகைய காலம், அவரது மேன்முறையீடு முடிவுறுகையில் கட்டளையிடப்பட்ட அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.".

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*